**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM**

| | | |
|---|---|---|
| **MCOP No. 270/2022** | **நாள் – 03.02.2026** | **சாட்சி – எ.ம.சா.1** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விக்னேஷ் | தந்தை பெயர் | கோபால் |
| ஊர் | கும்பகோணம் | தாலுக்கா | கும்பகோணம் |
| தொழில் | இளநிலை உதவியாளர், கும்பகோணம் வட்டார போக்குவரத்து அலுவலகம் | வயது | 31/2026 |

**முதல் விசாரணை:**

நான் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட சாட்சி அழைப்பாணையை பெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆக சாட்சியம் அளிக்கிறேன்.

1. வட்டார போக்குவரத்து அலுவலர் சாட்சியம் அளிக்க எனக்கு வழங்கிய அனுமதிக் கடிதம் சா.சா.ஆ.1

2. பாலமுருகன் என்பவரின் ஓட்டுநர் உரிமம் சான்றிட்ட நகல் சா.சா.ஆ.2

13.04.2022ல் விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற பாலமுருகன் என்பவருக்கு 09.02.2021 முதல் 26.05.2025 வரை ஓட்டுநர் உரிமம் போக்குவரத்து அல்லாத வாகனங்கள் குறித்து புதுப்பிக்கப்படவில்லை. இருசக்கர வாகனம் மற்றும் இலகுரக வாகனம் ஓட்டுவதற்கு விபத்து தேதியில் ஓட்டுநர் உரிமம் காலாவதி ஆகிவிட்டது.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u> :–**

கனரக வாகனங்களுக்கு ஓட்டுநர் உரிமம் வழங்கும் போது இலகுரக வாகனம் மற்றும் இருசக்கர வாகனத்திற்கு ஓட்டுநர் உரிமம் உள்ளடங்காதா என்றால் கனரக வாகனங்கள் ஓட்டுநர் உரிமம் கோரும் போது இலகுரக வாகனங்கள் மற்றும் இருசக்கர வாகனங்களுக்கு சேர்த்து கோரியிருந்தால் மொத்தமாக இரண்டு தர வாகனங்களின் (Transport and Non transport) ஓட்டுநர் உரிமம் குறிப்பிட்டு ஓட்டுநர் உரிமம் தரப்படும். கனரக வாகனங்களுக்கு மேற்படி தேதியில் ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றால் சரிதான்.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.02.03 18:01:28 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*